19.11.2024 **MCOP.No. 69 /2021**

**ம.சா.1 பெயர்:** லட்சுமி

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவர் எனது அம்மா. எனது அம்மாவிற்கு நானும் வனிதாவும் வாரிசுகள் ஆகும். பேருந்தில் பயணம் செய்த சமயத்தில் விபத்து ஏற்ப்பட்டது என்றால் சரிதான். தேதி தெரியுமா என்றால் தெரியாது 2021 வது வருடம் ஆகும். மளிகை பொருட்கள் வாங்கிக்கொண்டு பேருந்தில் பயணம் செய்தார் என்றால் சரிதான். எனது அம்மா கையில் பை வைத்து இருந்ததால் பேலன்ஸ் செய்யமுடியாமல் எனது அம்மாவின் அஜாக்கிரதையால் கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நடத்துனரின் அறிவுரைப்படி நடந்திருந்தால் எனது அம்மாவிற்கு விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அம்மாவின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்ப்பட்டதால் 2-ம் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கு வருமானம் எதுவும் இல்லை என்றும் அதனால் தான் ரூ. 20,000/- மாத வருமானத்திற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விவசாயத்தின் மூலம் எனது அம்மாவிற்கு மாதம் ரூ 20,000/- வருமானம் வரும். நான் திருமணம்மாகி தனியாக வசிக்கிறேன் என்றால் சரி. எனது அம்மா என்னுடன் தான் இருந்தார். எனது அம்மா தனியாக இருந்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தங்கை வனித்தாவும் திருமணம்மாகி தனியாக தான் உள்ளார் என்றால் சரிதான். நாங்கள் எனது அம்மாவின் வருமானத்தை நம்பி இல்லாததால் இழப்பீடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்பின் கீழ் அதிகப்படியான தொகை கோரியுள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

ஒம்/- திருமதி. G.கலைவாணி, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம்,

ஊத்தங்கரை.